# கல்கி

● மதுமோகன் ஒரு வித்தியாசமான இளைஞர். எலெக்டிரிகல் இஞ்சினியரிங் படித்தவர். குடும்பத்தாருக்கும் இசையார்வம் உண்டு. (அப்பா, மாவட்ட கலெக்டர்; அம்மா வயலினிஸ்ட்) ஒரு தடவை எம்.எஸ். கச்சேரியைக் கேட்க வாய்ப்புக் கிடைத்தது. மனிதர் சொக்கிப் போனார். அப்புறம் கர்நாடக இசை கற்றுக் கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது. கற்றுக் கொண்டார். கனடாவில் வேலை கிடைத்ததும் அங்கே போனார். "இன்னும் மியூசிக் கற்றுக் கொள்ள வேண்டும்; ஆனால் அங்கே அதற்குரிய வசதி இல்லை. எனவே வேலையை ராஜினாமா பண்ணி விட்டு, இங்கேயே வந்து விட்டேன். இந்த சீசன் முடிந்தபின் மீண்டும் கனடா போய், வேறு வேலை பார்க்கப் போகிறேன்" என்கிறார் மதுமோகன். இந்த சீசனில் இவருக்கு ஏழு கச்சேரிகள்.

